மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கடந்த கால பாக்கியைத் தர வேண்டியது கடந்த கால நிர்வாகம்தான். அவர்கள் தர வேண்டியதை அரசு சார்பில் தருவதற்கு விதியில் இடம் இல்லை. ஆனால் அந்த பாக்கியை அந்த நிர்வாகத்திடமிருந்து பெற்றுத் தர அரசு எல்லா முயற்சிகளையும் செய்யும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: இந்தக் கல்லூரியை வக்ஃப் போர்டு மேற்கொண்ட பிறகும் பிராதுகள், புகார்கள் வந்து கொண்டிருப்பது மாண்புமிகு கல்வி அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட புகார்கள் ஏதும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

திரு. க. மீனுட்சிசுந்தரம்: கல்லூரி நிர்வாகம் கல்லூரியிலுள்ள ஆசிரியர் நல நிதி, ஆசிரியர் ஊதியம் போன்றவற்றிலிருந்து பணத்தைக் கையாடல் செய்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நிர்வாகிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குக் கடுமையான தண்டனையை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

Short Term B.Ed., Training Classes

74 *Q.*—THIRU M. SANKARALINGAM, THIRU K. MEENAKSHISUNDARAM and THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to Question No. 13 on 31st December 1977 on the floor of the Legislative Council:

(*a*) whether there is any proposal with the Government to resume the Short Term B.Ed., Training Classes;

(*b*) whether any representation has been received by the Government in this regard; and

(*c*) if so, the action taken thereon?

குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகள்.

திரு. எம். சங்கரலிங்கம், திரு. க. மீனுட்சிசுந்தரம், திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் 31-12-1977 ஆம் நாளன்று வினு எண் 13-க்கு

அளித்த விடையினையொட்டி, கீழ்க்கண்டக் வினாக்களுக்குப்பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) குறுகிய கால பி. எட். (B. Ed.) பயிற்சி வகுப்புகளை மீண்டும் நடத்துவது பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) இதுபற்றி அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகளை மீண்டும் நடத்துவது பற்றி செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(இ) இல்லை.

(உ) வினா 'இ' வில் கண்ட பதிலின் காரணமாக இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகளை தமிழ் நாட்டிலே எடுத்துவிட்ட காரணத்தால், தமிழ் நாட்டிலுள்ள ஆசிரியர்கள் கருநாடக மாநிலத்திற்குச் சென்று, அந்தப் பயிற்சியைப்பெற வேண்டிய நிலையில் இருப்பதால், பண இழப்பு, நேர இழப்பு இன்னும் இது போன்ற பல இழப்புக்கு ஆளாகின்றார்கள். மீண்டும் குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகளை திறப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தக் குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகளை நாம் நிறுத்தி விட்டதற்குக் காரணம் 8 ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் இன்றைய தினம் வேலையில்லாமல் இருப்பது. அந்த அடிப்படையில்தான் அது எடுக்கப் பட்டிருக்கிறது. மைசூரில் இருக்கிற அந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில்கூட தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய தென் மாநிலங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு என்று ஒரு பொதுவான பயிற்சியைத்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: தமிழ் நாட்டிலே பல்கலைக் கழகங்களில் கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் என்று நடத்துவது மாதிரி இந்தப் படிப்பினைப் புகுத்தலாம் அல்லவா? அப்படிப் புகுத்தினால், ஆசிரியப் பெருமக்கள் கற்றுக் கொள்ள வாய்ப்பும் ஏற்படும், செலவும் அதிக மாகாது. இந்த முறையைப் புகுத்தி ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மைசூரிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இருக்கின்ற வாய்ப்பை இவர்கள் பயன் படுத்திக்கொள்ளலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பி. எட். படிப்புக்காக விண்டர் கம் சம்மர் கோர்ஸ் நவம்பர் மாதம் முதல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் துவக்க இருப்பதாகச் சொல்கிருர்கள். அதற்கு அரசின் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேட்கவும்.

Secondary Grade Teachers and Specialist Teachers

*75 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM, THIRU S. MUTHUSWAMY and THIRU C. R. LAKSHMIKANTHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to regularise the services of Secondary Grade Teachers and Specialist Teachers, appointed on or after 1st April 1970, from the date of their joining duty as had been done in the case of Graduate Teachers, sanction increments and pay the arrears; and

(*b*) if so, when it will be implemented ?

இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள்.

திரு. க. மீனுட்சிசுந்தரம், திரு. செ. முத்துசாமி, திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேம்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் 1-4-1970 அன்றும் அதற்குப் பின்பும் பணியில் சேர்ந்த இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள் ஆகியோருக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப் பட்டதைப் போல அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதலே பணி வரன்முறை செய்து, ஊதிய உயர்வு அனுமதித்து நிலுவைத் தொகையை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமுல்படுத்தப்படும் ?